ஆதியாகமம் 9:13

நமது வில்லை மேகங்களிலே வைப்போம், அதுவே நமக்கும் உலகத் துக்கும் உள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாகும்.

உபாகமம் 31:8

உங்களை நடத்துபவராகிய கர்த்தரே உன்னோடு இருப்பா ரல்லாதே அவர் உன்னை விடவும், கை நழுவவும் மாட்டாராகையால் நீ அஞ்சவும் கலங்கவும் வேண்டாம் என்றான்.

உபாகமம் 7:9

ஆனதினால் உன் தேவனா கிய கர்த்தர் வல்லபமும், உண்மை யும் பொருந்திய தேவனென்றும், அவர் தம்மை நேசித்துத் தம்முடைய கற்பனைகளை அநுசரிக்கிறவர் களுக்கு ஆயிரந் தலைமுறைகள் மட்டும் உடன்படிக்கையையும் கிருபாகடாட்சத்தையும் காக்கிறவர் என்றும்,

சங்கீதங்கள் 103:17-18

ஊர்க்குருவிகள் அங்கே கூடு கட்டும். அவைகளில் நாரையினு டைய கூடே முதல். உயர்ந்த மலைகளிலே மான்கள் வசிக்கும்; கற்பாறைகளில் முள்ளம்பன்றி தங்கும்.

எபிரேயருக்கு எழுதிய நிருபம் 9:15

(கடவுளால்) அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தைப் பெற் றுக்கொள்ளும்பொருட்டு முந்தின உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களைப் பரிகரிக்கும்படி தாம் அடைந்த மரணத்தால் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராய் இருக்கிறார். (கலாத். 3:15; 1 தீமோ. 2:5.)

எபிரேயருக்கு எழுதிய நிருபம் 8:6

இப்பொழுதோ, மேன்மையான வாக்குத்தத்தங்களால் உறுதியாக்கப்பட்டிருக்கிற மேலான உடன்படிக்கைக்கு இவர் எப்படிப்பட்ட மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அவ்வளவுக்கு மேலான குருத்துவ ஊழியத்தை அடைந்திருக்கிறார்.

யாத்திராகமம் 19:5

ஆகையால் நீங்கள் நமது வாக்கைக் கேட்டு, நமது உடன்படிக்கையைக் கைக் கொண்டு அனுசரிப்பீர்களேயாகில் சகல ஷஜனங்களிலும் நீங்கள் நமக்கு அதிக பிரியமான ஆட்சியாயிருப்பீர்கள். ஏனெனில், பூமியெல்லாம் நம்முடையது.

யோபாகமம் 31:1

கன்னிப் பெண்களின் மேல் சிந்தனை முதலாய் எனக்கு வராத படிக்கு நான் என் கண்களோடு உடன்படிக்கை பண்ணியிருந்தேன்.மீ

ஆதியாகமம் 9:11

உங்களோடு நாம் உடன்படிக் கையைப் பண்ணுவோம்; ஆதலால் இனி மாமிசமெல்லாம் பிரளயத் தண்ணீர்களால் பரிச்சேதம் அழிக்கப் படாது. உள்ளபடி பூமியைப் பாழாக்க இனி ஷஜலப்பிரளயம் வராதென் றருளினார் (இசா. 54:9).

எபிரேயருக்கு எழுதிய நிருபம் 13:20-21

கடைசியாய் நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளின் பெரிய மேய்ப்பரான நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்து நாத ரை மரித்தோரினின்று எழுந்து வரச் செய்த சமாதான தேவன், (உரோ. 15:33.) சேசுக்கிறீஸ்துநாதரைக் கொண்டு தமது சமுகத்திற்குப் பிரியமானதை உங்களிடத்தில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகலவித நற்கிரியைகளுக் கும் இணக்குவாராக. சேசுக்கிறீஸ்துநாதருக்கே அநவரதகாலமும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

யாத்திராகமம் 34:28

ஆகையால் மோயீசன் அவ்விடத்திலே நாற்பது பகலும் நாற்பது இரவுமாய்க் கர்த்தரோடு தங்கி அப்பத்தைச் சாப்பிடாமலும் தண்ணீரைக் குடியாமலும் இருந்தான்; கர்த்தரும் உடன்படிக்கையின் பத்து வசனங்களையும் கற்பலகைகளில் எழுதியருளினார்.